மாநகராட்சி மன்று
18-4-1994
யாழ்ப்பாணம்

# ‘வை.கோ.’ கூட்டத்தில் 10 லட்சம் ஆதரவாளர்கள்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 60 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 5 இதழ் 67
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 18-4-1994

## ‘ஜெ’யே முதல் எதிரியாம்

(சென்னை) தனது எதிர்பசை இருப் பதற்கு திரு. கருணாநிதிக்கு [illegible] எனவும் இனிமேல் தனது முதல் எதிரி தமிழக முதல்வர் ஜெயலலிதாவே என்றும் சென்னை மரீனா கடற் கரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ம.தி.மு.க. (வை. கோ. அணி) கூட்டத்தில் திரு. வை. கோபாலசாமி கூறினார்.

தமிழகம் மற்றும் பிற மாநிலங்களின் மூலைமுடுக்கு களில் இருந்து இக்கூட்டத் திற்கு சுமார் பத்து லட்சம் பேர் வந்திருந்தனர். வரலாறு

(4-ம் பக்கம் பார்க்க)

## ‘மே’யில் யாழ். வர முகமட் முயற்சி!

(கொழும்பு) “மே” மாத முதல் வாரத் தில் சபாநாயகர் எம். எச். முஹம்மது தனது யாழ். விஜயத்தை மேற்கொள்ள முயற்சித்து வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்குச் சென்று விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவ

4 ம் பக்கம் பார்க்க)

# வெளிநாடுகள் இலங்கைக்கு இராணுவ உதவி வழங்குவதால் வெளிநாட்டவர் மீது இலக்கு!

## ‘எல்லாளன் படை’ கூறுகிறது

(கொழும்பு)

வெளிநாடுகள் இலங்கை இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு பதிலாக இலங்கை அரசுக்கு ஆயுதங்களையும் இராணுவ தளபாடங்களையும் வழங்கிவருவதாகவும் இலங்கை அரசு இதற்கான பணத்தை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலமும் உல்லாசப்பயணத்துறையிலிருந்தும் பெற்றுவருவதாக ‘எல்லாளன் படை’ குற்றம்சாட்டியுள்ளது.

பி. பி. ஸி.க்கு அனுப்பி கூறுகையில், [illegible] படை இவ்விடைத்தை அளித் துள்ளதாம். இக்கடிதத்தில் எல்லாளன்படை. மேலும் [illegible] இலங்கை இனப்பிரச்னை தீர்க்கப்படாவிடில் நாட்டுக் குள் வரும் வெளிநாட்டு பயணி கள் கொல்லப்படுவார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளது. தற்போது இவ்வாறான தொரு நிலை ஏற்பட்டால் அதனை படையினரால் சமா

(4-ம் பக்கம் பார்க்க)

## உல்லாசப் பயணத் துறைக்கு பெரும் பாதிப்பு ஏற்படலாம்

(கொழும்பு) “எல்லாளன் படை” விடுத்த எச்சரிக்கை இலங்கையின் பொருளாதார முக்கியத்து வம் வாய்ந்த உல்லாசப்பய ணத்துறையை பெரிதும் பாதிக்குமென பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர். இலங்கையில் சுற்றுலாப் பயணிகள் வருகைகாலம் முடிவு றும் இவ்வேளையில் வெளிநாட் டவர்க்கு எதிராக எல்லாளன் படையின் மிரட்டல் வந் துள்ளது. எனினும் வெளி

(-ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் தாக்குதலுக்கு முன் கிழக்கே படை நடவடிக்கை

(திருமலை) வடக்கில் பாரிய தாக்கு தல் ஒன்றை நடாத்த முன் கிழக்கில் புலிகளுக்கு எதிராக கடுமையான தாக்குதல் ஒன்றை நடாத்தி அவர்களை அங்கிருந்து வெளியேற்ற நட வடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இவ்வாறு இராணுவ தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா திருமலையில் இரா ணுவ அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித் துள்ளார்.

இங்கு அவர் மேலும் கூறு கையில்; கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகளை பாரிய இரா ணுவ நடவடிக்கை மூலம்

(2-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தேடுதல் தீவிரமடைகிறது

(கொழும்பு) எல்லாளன் படை’ வெளி நாட்டு பயணிகளுக்கும், வெளி நாட்டு முதலீட்டாளர்களுக் கும் விடுத்த மரண எச்சரிக் கையை அடுத்து தெற்கில் தேடுதல் நடவடிக்கையை பொலிஸார் தீவிரப்படுத்தி யுள்ளனராம்.

(2-ம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பில் இறந்தவர் ஏற்கனவே கைதானவர்

(கொழும்பு) கொழும்பு குண்டு வெடிப் பில் கொல்லப்பட்ட அன்ரனி அருள்தாஸ் உலகத் தமிழ் தீவிரவாத குழுவுடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும் [illegible] படை யினரால் ஏற்கனவே கைது செய்யப்பட்டுவிசாரணை செய்

(4-ம் பக்கம் பார்க்க)

## வெடி மருந்துகளுடன் சூட்கேஸ் மீட்பாம்

(கொழும்பு) கொழும்பு குண்டு வெடிப் பில் கொல்லப்பட்டதாக கூறப்படும் அருள்தாஸ் இருந்த விடுதியை பொலி ஸார் சோதனையிட்டபோது அங்கிருந்து வெடி மருந்து

(2-ம் பக்கம் பார்க்க)

## விஷவாயு சிலிண்டர்கள் கொழும்பில் மீட்பு

(கொழும்பு) கொடியவிஷ வாயுவை உரு வாக்கும் இரசாயனங்களை நிறைந்த நான்கு சிலிண்டர் களை கொழும்புத் துறைமுகத் தில் வைத்து துறைமுக அதி காரிகள் கைப்பற்றியுள்ளனர்.

(2-ம் பக்கம் பார்க்க)

## திருமலை தாக்குதலில் சிப்பாய் உயிரிழப்பு

(திருமலை) திருமலையில் நேற்று முன் தினம் இரவு பொலிஸ் காவ லரண் ஒன்றின் மீது விடுத லைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸ் காவல் படையில் ஒருவர் கொல்லப்பட்

4-ம் பக்கம் பார்க்க)

## புதிய கட்சியை ஹேமா ஆரம்பிக்கார்

(கொழும்பு) புதிய கட்சி எதனையும் ஆரம் பிக்கப் போவதில்லை என திருமதி ஹேமா பிரேமதாசா கூறியுள்ளார்.

தாம் எந்த எதிர்க்கட்சிகளு டனும் அணி சேரப் போவதில்லை என்றும் தமது கணவர் ஐ. தே. க. விற்காகவே பாடுபட்டு உயிர் நீத்தார். அவரது எந்தவொரு கொள்கையையோ, இலட் சியத்தையோ மாற்றப்போவ தில்லை என்றும் திருமதி ஹேமா கூறியுள்ளார்.

ஹேமாவையும் அவரது மகனையும் கட்சிக்குள் கொண்டு வர முயற்சிகள் நடைபெற்று வருகின்றபோதும் அதற்கு எதிர்ப்பும் இருந்து வருகிற தாம். (ஸ)

## அதிக விலையில் அரிசி விற்ற வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்) எமது மக்களின் அன்றாட உணவுப் பொருட்களில் ஒன் றான அரிசியை சரியான முறையில் கட்டுப்பாட்டு விலையுடன் கிடைப்பதற்கு கூட்டுறவுத் துறையினூடாக நட வடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது. இந்த நடவடிக்கை யின் போது பொதுமக்களுக்கு அதிக விலையில் அரிசியை விற்றமைக்காக ஏராளமான வர்த்தகர்கள் மீது நட வடிக்கை எடுக்கப்பட்டுள்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமர்த்தர் நோவு எண்ணெய் கிடைக்குமிடம் எஸ். கே. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி 900)

### O/L கணிதம் 94

Distinction, Credit பெற வேண்டிய இதுவரையும் சித்தியடையாதோரும் (ஆண்டு-9, 10) உயர்தரத்திற் பிக்கப்படுவோர் ஆசிரியர் B. Sc 85. சிவன் கோவிலடி: திருநெல்வேலி. (கி-961)

### வீடு விற்பனைக்கு

மட்டுக்கோட்டை மூளாய் வீதியில் உடுக்கியவளைப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஸ்ரீமுருகன் அச்சகம், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. (கி-963)

### கலைச் சேவை

கைதடிப் பழனியின் தவில் மழை எங்கும் ஒலிக்கின்றது. அவரது புதல்வர்கள் பஞ்சமூர்த்தி, பாலநந்தீஸ்வரன் என்பவர்களும் கலை உலகில் பிரவேசிக்கின்றனர். அவர்களது தவில் கச்சேரிகளுக்கு ஒழுங்கு செய்யுங்கள். கே. பழனி, தபால் கந்தோர் முன்பாக, கைதடி. (கி-964)

---

உ

சிவமயம்

திருநெல்வேலி

ஸ்ரீ நீலாயதாக்ஷி ஸமேத ஸ்ரீ காயாரோஹண சுவாமி

தேவஸ்தானம்

(சிவன் கோவில்)

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா

## 1008 சங்காபிஷேகம்

நிகழும் பவ வருடம் சித்திரைத்திங்கள் 6-ம் நாள்

**19-4-94 செவ்வாய்க்கிழமை**

காலை 7 மணி முதல் எம்பெருமானுக்கு

ஃ சகஸ்ர சங்காபிஷேகமும் ஃ

பரிவாரமூர்த்திகளுக்கு

ஃ அஷ்டோத்தர சங்காபிஷேகமும் ஃ

நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

★ அத்தருணம் அடியார்கள் அபிஷேகத்துக்கு வேண்டிய பால், தயிர், பழ வகைகள் போன்றவற்றைக் கொடுத்து எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்று வாழ்வீர்களாக.

**ஸ்ரீ காயாரோஹண சுவாமி தேவஸ்தானம்,**

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(ஏ-3999)

---

## பல்கலைக்கழக அனுமதிக்கு பதிவு செய்யாத இடத்துக்கு புதிய மாணவர் நியமனம்

(கொழும்பு)

1992/93 கல்வி ஆண்டுபல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ள மாணவர்களில் 100 பேர் இன்னும் கல்வியைத் தொடர்வதற்கு பதிவு செய்யவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களது இடத்துக்கு வேறு புதிய மாணவர்களை அனுமதிப்பது சம்பந்தமாக பல்கலைக்கழக மானியக் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (ம-இ)

---

5-ம் ஆண்டு புலமைப் பரிசில்:

## அடுத்த தவணை முதல் விரும்பிய பாடசாலையில் இடம்

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்ற மாணவர்கள் அடுத்த தவணை முதல் அவர்கள் விரும்பிய புதிய பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவார்கள்.

திறமைச்சித்திபெற்ற மாணவர்களுக்கு அவர்கள்பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் புதிய பாடசாலைகளுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. அனுமதிக்கப்பட்ட புதிய பாடசாலைகளின் விபரங்கள் முன்கூட்டியே அவர்களின் தற்போதைய பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுவிட்டது.

தாம் விரும்பிய பாடசாலைகளுக்கு இடம் கிடைக்காத மாணவர்கள் உடனடியாக கல்வி அமைச்சுக்கு விண்ணப்பிக்கும்படி கேட்கப்படுகின்றார்கள். வி இ

---

### கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சில தினங்களாக தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளும் ஏனைய பகுதிகளும் படையினரின் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டதாகவும் பலர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைதானவர்களில் பலர் தீவிர விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டதாகவும் பலர் மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். -இ

---

### விஷ வாயு சிலிண்டர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சிலிண்டர்கள் இந்தியாவின் பம்பாய் நகரில் இருந்து எகிப்து வழியாக இஸ்ரேலுக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் கொழும்புக்கு வந்தபோது துறைமுகத்தில் வைத்துக் கைப்பற்றப்பட்டதாக துறைமுக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மேற்படி சிலிண்டர்களை ஏற்றி வந்த கப்பலை கொழும்பு துறைமுகத்தில் வைத்து சோதனையிட்டபோதே இவை கைப்பற்றப்பட்டனவாம். தற்போது இவை பறிமுதல் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளன. -ம-இ

---

### வெடி மருந்துகளுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களும்' உலோக உருளை பந்துகளும் நிரப்பிய சூட்கேஸ் கண்டுபிடிக்கப்பட்டதாக புலனாய்வு துறையினர் கூறியுள்ளனர்.

கொழும்பில் அண்மையில் வெடித்த குண்டுகள் முன்பு வெடித்த குண்டுகள் போல் அல்லாது மனிதரை ஊனமாக்கும் அல்லது கொல்லும் தன்மை வாய்ந்தவை என அரச அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இவ்வாறான வெடிகுண்டு நிபுணர்கள் படையினருடன் இணைந்து தீவிர சோதனைகளில் தினமும் ஈடுபட்டு வருகிறார்களாம். (சி)

---

### சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

(அரியாலை)

கோப்பாயிலுள்ள நலன் காக்கும் பிரிவுத் தலைமைச் செயலகத்தில் தையல், சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு அண்மையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நடப்பு வருடத்திற்கான பயிற்சி வகுப்பை கோப்பாய் பிரதேச செயலரின் திட்ட உத்தியோகத்தர் ஆரம்பித்து வைத்தார். -59-இ

---

### வடக்கில் தாக்குதலுக்கு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

90 வீதத்திற்கு குறைக்க முடியும். இந்நிலையில் இலகுவில் இருந்து படையினரை வடக்கே நகர்த்த முடியும். அப்போது இராணுவத்தினர் இடத்தை பொலிஸார் எடுப்பர் என்றார்.

இதேவேளை இவ்வருட இறுதிக்கு முன் வடக்கில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்காக புதிய படையணிகள் உருவாக்கப்பட்டு வருவதாகவும் இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளன. (சி)

---

# பனை எமது சொத்து

★ எமது இயற்கை வளங்களில் ஒன்று பனை

★ தமிழீழ வளத்தின் குறியீட்டுச் சின்னம் பனை

★ பல்லாயிரம் பேர்களுக்கு தொழில் வழங்குவது பனை

★ பலவித பயன்களை வழங்குவது பனை

★ மண்ணரிப்பைத் தடுப்பது பனை

★ மழை பெய்விப்பது பனை

★ நீண்டகாலம் பயனளிக்கும் சீனிமரம் பனை

★ அந்நியச் செலாவணி அளிக்கக்கூடியது பனை

★ பல வருடங்கள் பயனளிக்கக்கூடியது பனை

எனவே

## ★ பனையைத் தறியாதீர் ★

அனுமதியின்றி பனை தறித்தால்

தறிக்கப்பட்ட ஒவ்வொரு பனைக்கும்

ஃ 1000 ரூபா வீதம் ஃ

அபராதம் விதிக்கப்படும்

ஃ அனுமதியின்றிப் பனை தறிப்போர் பற்றிய விபரத்தை அண்மையில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வட்டத் தொடர்பாளர் செயலகத்தில் அல்லது அரசியல்துறை வட்டப் பொறுப்பாளர் செயலகத்தில், அல்லது காவல்துறையினரிடம் தெரியப்படுத்துங்கள்.

**பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி,**

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(ஏ-3955)

---

உ

ஓம்சக்தி

வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்

[நாச்சிமார் கோவில்]

## 9—ம் திருவிழா

ஃ பூந்தண்டிகை உற்சவம் ஃ

**(19-4-94)**

மேற்படி உற்சவத்தில் ஈழத்தின் சிறந்த தவில் — நாதஸ்வர வித்துவான்கள் பங்குபற்றி சிறப்பிப்பார்கள்.

★ அடியார்கள் அம்பாளை தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

9ஆம் திருவிழா உபயகாரர்.

(ஏ-4000)

